1973 டிசம்பர் 3]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டாக்டர் எச். வி. ஹண்டே, திரு. கே. டி. கே. தங்கமணி ஆகிய இருவர், ஒரு துணை நீதிபதியைப் பற்றி. அதாவது சப்-ஜட்ஜ், தஞ்சை மாவட்டத்திலே பணியாற்றுபவரைப் பற்றிக் கேட்டிருக்கின்றார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, அது அவருடைய தொழில் சம்பந்தப்பட்ட புகாரா ? அல்லது சொந்தத்திலே அவருடைய சொந்த நடவடிக்கைகளைப் பற்றிய புகாரா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீதித் துறையினுடைய பணிகளுக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி.

Inclusion of Manapparai taluk in the proposed Pudukkottai district.

3 *S.N.Q.*—Thiru S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to include Manapparai Taluk in the proposed new District Pudukottai after bifurcating Tiruchirappalli District ;

(*b*) whether there is any objection from the public of Manapparai Taluk to the proposed inclusion of their taluk in the proposed district of Pudukottai ; and

(*c*) if so, the action taken thereon ?

அமையவிருக்கும் புதுக்கோட்டை மாவடடத்தில் மணப்பாறை வட்டத்தைச் சேர்த்தல்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரித்த பிறகு, தனியாக அமைக்கக் கருதியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில், மணப்பாறை வட்டத்தைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்பு எதும் உள்ளதா ?

(இ) தனியாக அமைக்கக் கருதியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் மணப்பாறை வட்டத்தைச் சேர்க்கக் கருதியிருப்பது குறித்து, மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மறுப்பு எதும் வந்துள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) மணப்பாறை வட்டத்தை புதுக்கோட்டை மாவட்டத்துடன் இணைக்கத் தேவையில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

Representation of Labourers Munnetra Sangam in the Tripartite Discussions being held in Delhi on the fixation of salaries for the labourers in Sugar Mills.

4 *S.N.Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received any representation on the imperative need for the representation of the Labourers Munnetra Sangam, the Central Association of Trade Unions, having the majority of labourers working in Sugar Mills in Tamil Nadu as member, in the Tripartite Discussions being held in Delhi on the fixation of salaries for the labourers working in sugar mills ;

(*b*) if so, the action taken thereon ; and

(*c*) the benefits thereof ?

டெல்லியில் நடைபெற்று வருகிற சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் ஊதிய நிர்ணயம் குறித்த முத்தரப்புப் பேச்சு வார்த்தையில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு பிரதிநிதித்துவம்.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) டெல்லியில் நடைபெற்று வருகிற சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் ஊதிய நிர்ணயம் குறித்த முத்தரப்புப் பேச்சு வார்த்தையில் தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகிற தொழிற்சங்கங்களின் மத்திய நிறுவனமாகிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு பிரிதிநிதித்துவம் அளிக்கப்பட்டாக வேண்டியதன் அவசியம் குறித்து அரசுக்கு முறையீடு ஏதும் வரப் பெற்றதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாது ?

(உ) அதனால் ஏற்பட்ட பலன்கள் என்ன ?